ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஆஞ்சநேயர்

தோத்திரப் பதிகம்.

சென்னை சூளை

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

61

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

ஆஞ்சனேயர் தோத்திரப்பதிகம்.

காப்பு.

நம்மாழ்வார் துதி.

நேரிசை - வெண்பா.

கங்கைநீர்நாட்டினில்வாழ் காகுத்தன் றூதுவனைக்
கங்கைசேர்த்தேத்துங் கவிக்குதவுங்-கங்கையுறு
மாறன்றொளிரு மணித்தடஞ்சூழ்வண்குருகை
மாறன்றிருத்தாண் மலர்.

திருமால் துதி.

கட்டளைக் கலித்துறை.

நேயம்புரியவருமாஞ்சனேயநிமலனூறு
மாயம்புரியுயிறுதத்தறகண்மதகயங்கொல்
சீயம்புரியத்தமிழ்ப்பதிகத்துதிசெப்புதற்குப்
பாயம்புரியகைக்கோதண்டராவண்பதந்துணையே.

நூல்.

ஆசிரியவிருத்தம்.

நீர்கொண்ட கார்கொண்ட கொண்டலரவிந்தமலர்
நிகர்கொண்ட மேனிகொண்ட, நித்யவுயர் தத்வகுண
சத்வபர வஸ்துவெனு நெடியமா லருநெறியினால், சீர்
கொண்ட கண்டவிக லரியினைநூ சேயெனத் திகழரியின்
வருமண்ணலே, செம்பொனுல கம்புவி யாரதியர்க் கா
தாரதிட நிலயமான பொருளே, ஏர்கொண்ட வைமபெ
ரும் பூதமொன்று முருவியைந் திறல்கொண்ட முதலே,
இகவமஞ் ஞானவிரு ளொழியவெங் கெங்குமொளி யி
லகவெழுகின்ற சுடரே, ஆர்கொண்ட நின்மகிமை புகல்
வதற் கியாவர்தர மரியவரிடத்தி லன்பாய், ஆஞ்சமய
முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனேயக் கட
வுளே. 1

படியிலொடு முடிகொள்கரை கிடுகிடென நெடிய
கடல் பாயநீ டிருவடிகளும், பாசமென நீசருயிர் காச
முறவீசியெப் பாலுமே கோலும் வாலும், கொடியிரத
முரிபடக் கரிபடப் பரிபடக் குவிபடக் கொன்றகரமும்,
கொற்றியொடு வெற்றிபுனை வுற்றழகு பெற்றவுயர் குன்
றமென நின்றபுயமும், விடியல்வரு மண்டல மிரண்ட
னைய குண்டலம் விளங்கெழி லலங்கொள் செவியும்,
மிருகருணை தருநயன முகிழ்நகைகொள் முகவசனமே
ன்மையுங் கண்டடியனேன், அடிமைசெய வரமுதலவர்

தருள்வ தென்றபோ வடியவரிடத்தி லன்பாய், ஆஞ்ச மய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனேயக் கடவுளே. 2

மேருமந்தரமாதி வரைசெலாநின்பாத விரலினிறெ றுக்கிவிடுவாய், விரிதிரைக்கடனீரை யேற்றுவாய்பக்க லின் மிதித்தூற்றிடர் செய்குவாய், பேருமொளியிடிக ளொடு மேகக்குழாத்தைப் பிடித்துப்பிழிந் தெடுப்பாய், பிரமன்செயண்டங் கண்மெத்தென்றபந்தாய்ப்பிறங்கிட வெறிந்தாடுவாய், ஒரும்புகமுடிவில் வருவட வனலைவாயி னூ லூதித்தணித் தழிப்பாய், உரோமராசியில் வான சோதிகளெலாந் தோற்றவோங்குவாய் நினதுவண்மை, ஆருமுணர்வரிதவனை யடியனெனச் சொல்லுகே னடியவ ரிடத்தி லன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனேயக் கடவுளே. 3

சிறுமதலையானபொழு துண்ணுநற் கனியென்று செங்கதிரின்மேற் பாய்ந்தனை, செப்புமவ னிரதத்தின் முன்புபின்னடைகொண்டு சென்னநற்றிரங்கற்றனை, மறு விலாவீர கோதண்டராகுநாத வள் ருள்வழி நின்றனை, வாரிதியையங்கார தாரைகுடர்கொடுதாவி வளர்பவள வரையுற்றனை, தறுகணரிலங்கையிற் காவல்செய்வாளைத் தறைப்பட வறைந்தேகினை, ஜானகிக்காழியை யளித்

தஞ்சலஞ்சலென்று யென்றுயர் தீர்த்தனை, அறுதியில்
லாமையைப் பெருதியெனவுற்றுளா யடியவரிடத்திலன்
பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மா
ஞ்சநேயக் கடவுளே. 4

ஈரைந்துசிர மஃதிரட்டிவன் கானுமிராவணனசோ
கவனமோர், இமையினிற்றுகள்படுத் தெண்டிசைகுலு
ங்கவே யிகல்வீரகர்ச்சனை செய்தே, காரைந்துமூன் றாயு
தகிங்கரரை வெங்கணெறிதரு சம்புமாலிதன்னைத், தள
கர்த்தரைவரொடு தளமூற்றநிருதரைத் தாளாசன்மிதித்
துழக்கிக், கூரைந்துகிர்க்கரங் கொடுபீறியெற்றியுடல்
கூறுகூறாய்க் கிழித்துக், குழப்பிக்கலக்கிபவ் வரக்கனைத்
தேய்த்தாலி வெள்ளைபட விளையாடியே, ஆரைந்துசுத
ன்னடியுற்றுமயல் செற்றனை யடியவரிடத்தி லன்பாய்,
ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்ச
னேயக் கடவுளே. 5

மாபாவியாமிந்த்ர சித்துமுன்வஞ்சமாய் மலர்மகன்
பகழியேவ, வளர்விசயகோதண்ட வள்ளள்தம்பியும்
வாலி தம்பியும் மகனுமூராணிற், காயாதவானரர்கள் யா
வருசீவனிலை தவரிச்சமர்க்களத்தில்,சண்டமாருதமோத
வீழ்மாமரங்கள்போற் காய்வுற்றிருந்தபோதுய், வீயாமல்
வீடணன் விலக்குறவிலக்குவன் வேலேற்றுவீழ்ந்தபோ
தும், வேரோடுசஞ்சீவி மலையினைக்கொடுவந்த வீரநின்வி

சயதிரம், ஆயாதமதியினே னுரைசெயுந் தகையிதோ வடியவரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்ச விய நீத்தருளு மாஞ்சனேயக் கடவுளே. 6

இமையவர்களுகர்முறை கேட்குநின் செவிகளுக்கெனது முறைகேட்கவில்லையோ - இன்னரீர்த்தளவிலர் நன்மைவர்தாள் கருணை யெளியனேன்மீதில்லையோ, நிமையளவதன்றிகுநேரமோவென்னிலை நினக்குவெகுதூரமோ - நீமனதுவைத்திடிற் சாமியென்றுயரெலா நீக்குவதுமொருபாரமோ, சமாமிதில்வாராத தாமதமுமென்கொலோ தக்கதுணைவேறுமுளதோ-தமியன்மேல்வர்மமோ விதுநினதுதர்மமோ தடையானதென் கர்மமோ, அமைவருநிலேன்விரைவில் வந்துதவி செய்குவாயடியவரிடத்திலன்பாய் - ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனேயக கடவுளே. 7

பெற்றதாய்தந்தைநீ சுற்றமொடுநம்பிநீ பொருட்குருவுநீயே-பேதமில்லாதுதவு கல்விநீநெறியினிற் பிரியாத போதநீயே, நற்றவமுநீ மிக்கவீரமுநீ யுரமுநீ நாள்பெருஞ்செல்வநீயே-காதனீயாதலாலோதிலார்போல விடுதனல்லருளினுக்குரியதோ, குற்றங்கள்பலசெய்த தட்டனுகிலுமடிமை கொண்டபின் விடலாகுமோ-குறைகொண்டிதிடிற் பொரைகொள்வதன்றியே கோபங்கொள்வா

ருமுண்டோ, அற்றமிதில்வந்துதவி செய்குவாயையனே
யடியவரிடத்திலன்பாய்-ஆஞ்சமய முன்னின்று சாஞ்ச
லிய நீத்தருளு மாஞ்சநேயக்கடவுளே. 8

வாதமுதன்முப்பிணியில் விளையுமெய்ப்பிணியுநினைமன
தினினைக்குமுன்னே-வந்தவழிதெரியாம லோடுமேபொ
ல்லாதவஞ்சனைவகுத்தபில்லி, ஏதமுறுசூனியம் முதலா
னகர்யங்கள் யாவையும்நீராகுமே-இருளனெடுமுனிகரு
ப்படல்வீரன்மாடனுமிடாகினியுமாகாளியும், பூதவேதா
ளவித லேமனுடனவனேவல்புரிகின்றகாலபடரும்-பொ
ய்யாதநின்பெய ருரைத்திடிலடுங்கிடுவாய் பொத்தியே
யோடிடுவார், ஆதலானின்பெருமை யறிவதற்கெளிய
தோ வடியவரிடத்திலன்பாய்-ஆஞ்சமய முன்னின்றுசா
ஞ்சலிய நீத்தருளு மாஞ்சநேயக்கடவுளே. 9

நின்னருள்படைத்தவர்க் கென்னகுறையளகேச னிக
ரானவாழ்வுபெறுவார்-நீள்பொதியமாமலையின் மாதவவ
கத்தியனை நேர்சொல்லுகல்விபெறுவர், மன்னவர்க்கரச
ரா யுயர்புகழுநிறைவான வர்ழ்நாளுமுடையராவர்-மாத
ருடன்மக்கள்கிளையாலறுகுபோலவே வளர்வுறப்பெற்றி
ருப்பர், இன்னதெனுமொழிசெவி யுறுமலே சுகம்பிழவி
ல்யாவரொடும் வீற்றிருப்பார்-இம்மையினுமறுமையினு

மேதகையாவரெனிலெளியனினைவிட்டகல்வனே, அன்
னைநிலையானுமே பெறவருள்க வண்ணலே யடியவரிடத்
திலன்பாய்-ஆஞ்சமயமுன்னின்று சாஞ்சலிய நீத்தருளு
மாஞ்சநேயக்கடவுளே. 10

ஆஞ்சநேயர் தோத்திரப்பதிகம்

முற்றிற்று.